திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த சேஷசாயி தொழிற்சாலையில் ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னுலே வேலை நிறுத்தம் நடைபெற்றது உண்மை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆகவே முதலிலேயே பரிசீலனை செய்து இந்தச் சங்கம்தான் சரி என்று ஒப்பந்தம் செய்ததற்குப் பின்னுலே தொழிலாளர்கள் அந்தத் தொழிற் சங்கத்திற்கு விரோதமாக திரும்பி அந்த ஒப்பந்தத்தை எதிர்க்கின்ற காலத்தில், இன்ருவது அந்த ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை எல்லோருக்கும் உண்டு. இந்த அரசு சட்டமன்றத்தில் இதைக் கூறியிருக்கிறது, வேலை நிறுத்தம்செய்வது அரசை எதிர்த்துச் செய்வது என்று கருதாது என்று. ஒருவேலைநிறுத்தம் செய்துவிட்டாலேயே 12 (3) செட்டில்மென்ட் மாறிவிடுவது இல்லை. 12 (3) செட்டில் மென்டின் தன்மை அதற்குண்டான சட்ட விளக்கம் அனைத்தையும் இதே மன்றத்தில் கேஸ்-லாவைப் படித்துக் காட்டி விளக்கியிருக்கிறேன்.

மலைத்தோட்டத் தொழிலாளர் ஊதியம்.

*வினு எண். 115 திரு. கே. உச்சி, திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டத்தில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கடைசியாக எந்த ஆண்டில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது ?

(ஆ) ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்கப்படும் கூலி எவ்வளவு ?

(இ) நிர்ணயம் செய்த கூலி எல்லாத் தோட்ட அதிபர்களாலும் முறையாகக் கொடுக்கப்படுவது எப்படி கண்காணிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) நீலகிரி மாவட்டம் உட்பட தமிழ் நாட்டிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியம் 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் 1976-ம் ஆண்டு மாற்றியமைக்கப் பெற்று அது 18—11—1976-ம் ஆண்டு கெசட்டில் வெளிவந்துள்ளது.

1978 செப்டம்பர் 9]

(ஆ) சம ஊதியச் சட்டம் அமுலில் இருப்பதால் ஒரே மாதிரியான வேலைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியமும் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் நீலகிரி மாவட்டத்திற்கும் பொருந்தும். அந்த ஊதியம் வீதம் பின்வருமாறு :—

	அடிப்படை ஊதியம்.		பஞ்சப்படி.	
	ரூ.	பை.	ரூ.	பை.
1. வயது வந்தோர் (18 வயதிற்கு மேல்).	3	85	1	35
2. இளைஞர் (15 வயது முதல் 18 வயது வரை).	2	65	0	60
3. சிறுவர் (15 வயதுக்குக் குறைவான வர்கள்).	2	35	0	35

எதிர்காலத்தில், மேற்கண்ட பஞ்சப்படி நுகர்வோர் சராசரி விலைவாசி புள்ளி மாற்றத்திற்குத் தகுந்தவாறு மாற்றியமைக்கப் படவேண்டும்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், உதகமண்டலம், கூடலூர் என்ற மூன்று இடங்களில் தோட்டத்தொழில் ஆய்வாளர்கள் இருக்கின்றனர். தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்த குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படுகின்றனவா என இவர்கள் கண்காணித்து வருகின்றனர்.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர்வர்களே, இந்த நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைக் கூலி எல்லாத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுப்பது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிக் கொடுக்காத தோட்ட முதலாளி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கொடுக்கப்படவில்லை என்ற புகார் வரவில்லை. புகார் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, பெரிய தோட்டங்களிலும் சிறிய தோட்டங்களிலும் வேலை செய்பவர்கள் தொழிலாளர்கள்தான். அரசு நிர்ணயித்துள்ள அடிப்படைக் கூலியில் வித்தியாசம் இருப்பதாக அறிகிறோம். எனவே, அதைப் போக்கி, அனைவருக்கும் ஒரே சீராகக் கூலி கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்ச ஊதியம் எல்லோருக்கும் பொதுவாகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம கூலி கொடுக்கப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தச் சட்டம் அமல்படுத்துவதற்குப் பதிலாக, தொடர்ந்து இன்றைக்கும் பெண்களுக்கு குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. அந்தச் சட்டம் செய்யப்படுகிறபோது, நீங்கள் அமைச்சர் இல்லை. நானும், நீங்களும் ஒரே தொழிலாளர் அரங்கத்தில் தலைவர்களாக இருந்தோம். ஆண்கள் செய்யக்கூடிய வேலையைத்தான் பெண்கள் செய்கிறார்கள். இருப்பினும் பெண்கள் செய்யும் வேலையை கிரேடு 2 என்று போட்டு அவர்களுக்குக் குறைந்த கூலிகொடுக்க வேண்டும் என்று போட்டு இருக்கிறார்கள். அதனால் குறைந்த கூலி பெண்களுக்குத் தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. ஆகவே, அன்று செய்யப்பட்ட அநியாயத்தை முடித்துக் கட்டி, நியாயம் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, ஈக்குவல் ரெமியூனரேஷன் ஆக்ட்டின்படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான வேலை கொடுக்கப்பட்டால், ஒரே மாதிரியான கூலி கொடுக்க வேண்டும். இது சட்டம். அந்த சட்டத்தை யாராவது மீறினால், அதற்கு விரோதமாக நடந்தால் அதைக் குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்குத் தெரிவித்தால் அதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தோட்டத்தில் பணியாற்றும் இலங்கை அகதிகளுக்கு அந்த நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்படவில்லை என்ற புகார் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இப்போது கூட அவர்கள் வந்து இருக்கிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் புகாரை அரசிடம் கொடுத்தால் பரிசீலனை செய்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 10–00]

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, குறைவாகக் கூலி கொடுப்பதில்லை என்றும் அதற்கான கோரிக்கை அரசுக்கு வரவில்லை என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் கூடலூர்த் தொகுதி டெரஸ் எஸ்டேட்டில் குறைந்த கூலி கொடுக்கிறார்கள்

1978 செப்டம்பர் 9]

என்று சொல்லி, அதற்காக, போராட்டம் நடத்தினார்கள் ; பின்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதன் பிறகும் நிர்ணயித்த கூலி கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குறைவாக கூலி கொடுக்கப்படுவதில்லை என்று நான் சொல்லவில்லை. குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று புகார் வந்தால் இந்த அரசு விசாரிக்கும் என்று சொன்னேன். புகார் வந்தால், அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதைவிட இந்த அரசுக்கு வேறு என்ன வேலை இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 10 வினாக்கள் இருக்கின்றன. இன்றைக்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வேண்டி இருப்பதால், வினா நேரத்தை நீட்டித்துக்கொண்டு போக முடியாது. மேலும் வினா நேரத்தை நீட்டித்தால் மற்ற நிகழ்ச்சிகளும் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மீதமுள்ள கேள்விகளும், பதில்களும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்து அச்சிடப்பெறும்.

அரயபுரம் அரிசனக் குடியிருப்புக்கு மின்சக்தி வழங்கல்.

*வினா எண். 116 திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி சேத்திரபாலபுரம் ஊராட்சியில் அரயபுரம் அரிசன காலனிக்கு மின்வசதி செய்து கொடுக்க மின் கம்பம் நடப்பட்டு கம்பிகள் இழுக்கப்பட்டும் மின் இணைப்பு கொடுக்காததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) குத்தாலம் தொகுதி சேத்திரபாலபுரம் ஊராட்சியில் உள்ள அரயபுரம் அரிசன குடியிருப்புப் பகுதியில் தெரு விளக்குகள் அமைத்து அவைகளுக்கு 22—4—1978 அன்று மின்சக்தி அளிக்கப்பட்டு விட்டது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.